## 2024.01.29 அன்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் எட்டப்பட்ட முடிவுகள்

### 01. Bill and Melinda Gates Foundation மூலம் ஜனாதிபதி செயலகத்திற்கு வழங்கப்படவுள்ள உத்தேச கொள்கை ஒத்துழைப்பு

ஜனாதிபதி செயலகத்தால் கொள்கை ரீதியான விடயங்களுக்கு வழிகாட்டல் மற்றும் அரச வேலைத்திட்டங்களை கண்காணித்தல் போன்ற பணிகளை நிறைவேற்றுவதற்காக தற்போது நடைமுறைப்படுத்தப்படும் மறுசீரமைப்பு வேலைத்திட்டங்களில் முக்கிய பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. அவற்றில் குறிப்பாக சர்வதேச நாணய நிதியத்தின் நீடித்த நிதி வசதிகள், உலக வங்கியின் கொள்கை உதவித் திட்டங்கள் ஆசிய அபிவிருத்தி வங்கியின் கொள்கை உதவித் திட்டங்கள் போன்ற பல்தரப்பு நிறுவனங்கள் பலவற்றுடன் ஒருங்கிணைப்புக்களை மேற்கொள்வதுடன், பல்வேறு அரச மற்றும் தனியார் துறை தரப்பினர்களுடன் இணைந்து செயலாற்றி வருகின்றது. குறித்த வேலைத்திட்டங்களுக்கு ஜனாதிபதி செயலகத்திற்கு ஒத்துழைப்பு வழங்குவதற்காக வேலைத்திட்ட உதவி அலகொன்றை நிறுவி இலங்கை அரசுக்கு முனைப்பான ஒத்துழைப்புக்களை வழங்குகின்ற பங்காளர்களாக செயலாற்றுவதற்கு உலகில் பாரிய அறக்கொடை மன்றமான Bill and Melinda Gates Foundation இனால் தாபிக்கப்பட்டுள்ள சர்வதேச நிறுவனமான Global Health Strategies மற்றும் அந்நிறுவனத்தின் உள்ளூர் பங்காளர்களான Connect To Cate நிறுவனம் உடன்பாடு தெரிவித்துள்ளது. Bill and Melinda Gates Foundation இனால் இலங்கை அரசுக்கு ஒத்துழைப்பு வழங்குவதற்காக பல்வேறு வேலைத்திட்டங்களை முறைசார்ந்த வகையில் நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையான ஒருங்கிணைப்புக்களை மேற்கொள்வதற்காக சிரேஷ்ட அலுவலர்களுடன் கூடிய நிறைவேற்றுக் குழுவொன்று தாபிக்கப்பட்டுள்ளது. Bill and Melinda Gates Foundation இனால் ஜனாதிபதி செயலகத்திற்கு வழங்குவதற்கு உத்தேச கொள்கை ஒத்துழைப்பு தொடர்பாக கௌரவ ஜனாதிபதி அவர்கள் சமர்ப்பித்த விடயங்களை அமைச்சரவை கருத்தில் கொண்டுள்ளதுடன், அதுதொடர்பாக தேவையான தொடர் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக அமைச்சரவை உடன்பாடு தெரிவித்துள்ளது.

### 02. மட்டுப்படுத்தப்பட்ட நிலைமையின் கீழ் கருங்கல் ஏற்றுமதி செய்தல்

நாட்டில் தற்போது கட்டுமான அபிவிருத்திகளுக்குத் தேவையான கருங்கல் தேவை ஒப்பீட்டு ரீதியில் குறைந்த மட்டத்தில் காணப்படுவதால் கருங்கல் அகழ்வு தொழிற்துறையில் ஈடுபடுகின்ற அகழ்வோர் மற்றும் அதனுடன் தொடர்புடைய சமூகத்தவர்களின் வாழ்வாதார வழிகள் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளன. இந்நிலைமையைக் கருத்தில் கொண்டு மட்டுப்படுத்தப்பட்ட நிலைமையின் கீழ் கருங்கல் ஏற்றுமதி மூலம் இலங்கைக்கு வெளிநாட்டு செலாவணியை ஈட்டுகின்ற வேலைத்திட்டமொன்றை குறுகிய காலத்தில் நடைமுறைப்படுத்தல் பொருத்தமானதெனக் கண்டறியப்பட்டுள்ளது. ஹம்பாந்தோட்டை மாகம்புர துறைமுகக் கட்டுமானத்தின் போது அகற்றப்பட்டுள்ள கருங்கல் தொகையை தற்போது துறைமுக நகரத்தில் நிர்வாகக் கட்டிடத்திற்கு அருகிலும், ஹம்பாந்தோட்டை புதிய மருத்துவமனை வளாகத்திலும் குவிக்கப்பட்டுள்ளதுடன், குறித்த கருங்கல் குவியல்கள் துரிதமாக அகற்றப்பட வேண்டியுள்ளது. சுற்றாடல் அமைச்சர் அவர்களால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள யோசனையைக் கருத்தில் கொண்டு புவிச்சரிதவியல் ஆய்வு மற்றும் சுரங்கப் பணியகத்தின் கண்காணிப்பின் கீழ் குறித்த கருங்கல் தொகையை துரிதமாக ஏற்றுமதி செய்வதற்குத் தேவையான படிமுறைகளை மேற்கொள்வதற்கான அனுமதியை வழங்குவதற்கும், ஒரு மில்லியன் மெட்ரிக்தொன் கருங்கல் தொகையை ஏற்றுமதி செய்வதற்கான இயலுமை மற்றும் பொருத்தப்பாடு



163, කිරුළපන මාවත, කොළඹ 05, ශ්‍රී ලංකාව.
163, கிருலபன எவனியூ, கொழும்பு 05, இலங்கை.
163, Kirulapona Avenue, Colombo 05, Sri Lanka.
දු தொ T - (+94 11) 2515759
ෆැ பெ F - (+94 11) 2514753
ඊ மி E - dg@dgi.gov.lk
www.dgi.gov.lk
www.news.lk

தொடர்பான விடயங்களை ஆராய்ந்து விதந்துரையுடன் கூடிய அறிக்கையொன்றை சமர்ப்பிப்பதற்காக குழுவொன்றை நியமிப்பதற்கும் அமைச்சரவை தீர்மானித்துள்ளது.

**03. மன்னார் தீவில் காற்றாலை மின்னுற்பத்திக் கருத்திட்ட அபிவிருத்தி**

மன்னார் தீவில் காற்றாலை மின்னுற்பத்தி நிலையமொன்றை நடைமுறைப்படுத்துவதற்காக ஆசிய அபிவிருத்தி வங்கி நிதியின் கீழ் 47 மில்லியன் அமெரிக்க டொலர்கள் செலவிடப்பட்டு 06 காற்றாலை இயந்திரங்களை நிர்மாணிப்பதன் மூலம் மின்னுற்பத்தியை அதிகரிப்பதற்கான கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக 2020.10.26 அன்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. ஆனாலும், அரசின் வெளிநாட்டு கடன் மீள்கட்டமைப்பு வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தும் வரைக்கும் ஆசிய அபிவிருத்தி வங்கி நிதியைப் பயன்படுத்துவதற்கு இயலாது. அதனால், 20 வருடகால தொழிற்பாட்டுக் காலப்பகுதியுடன் நிர்மாணித்தல், உரித்துக் கொள்ளல், மற்றும் நடைமுறைப்படுத்தல் (BOO) இன் கீழ் போட்டி அடிப்படையில் தெரிவுசெய்யப்பட்ட தனியார் துறையின் முதலீட்டாளர்கள் மூலம் குறித்த கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**04. 2024 ஆம் ஆண்டுக்கான முப்படையினருக்கு உணவுப் பொருட்கள் (உலரா, உலர் உணவுப் பங்கீடு மற்றும் இதர) விநியோகத்திற்கான பெறுகை**

2024 ஆம் ஆண்டுக்கான முப்படையினருக்கு உணவுப் பொருட்கள் (உலரா, உலர் உணவுப் பங்கீடு மற்றும் இதர) விநியோகத்திற்கான 84.2 மில்லியன் ரூபாய்கள் (பெறுமதி சேர் வரியற்ற) பெறுகைக்கான மொத்தத் தொகை அமைச்சரவையால் நியமிக்கப்பட்டுள்ள நிரந்தரப் பெறுகைக் குழுவால் பரிந்துரைக்கப்பட்ட விநியோகத்தர்களுக்கு வழங்குவதற்காக பாதுகாப்பு அமைச்சராக கௌரவ ஜனாதிபதி அவர்கள் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**05. தேசிய கடன் பிணையங்கள் நிறுவனத்தின் நடவடிக்கைகளை ஆரம்பித்தல்**

சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாளர்களுக்கு சலுகைகளை வழங்கும் நோக்கில் தேசிய கடன் பிணையங்கள் நிறுவனத்தைத் தாபிப்பதற்காக 2021.04.27 அன்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. தற்போது குறித்த நிறுவனம் வரையறுக்கப்பட்ட பொதுக் கம்பனியாகப் பதிவு செய்யப்பட்டுள்ளதுடன், அதன் அடிப்படை மூலதனமாக 50 மில்லியன் அமெரிக்க டொலர்களை ஆசிய அபிவிருத்தி வங்கியிடமிருந்து பெற்றுக் கொள்வதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதற்கமைய, தேசிய கடன் பிணையங்கள் நிறுவனத்தின் நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்காக நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சராக கௌரவ ஜனாதிபதி அவர்கள் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**06. 2023/2024 பெரும்போக நெல் கொள்வனவு வேலைத்திட்டம்**

2023/2024 பெரும்போக நெல் கொள்வனவுக்கான சலுகை வட்டிவீதத்தின் கீழ் அரச மற்றும் தனியார் வங்கிகள் வாயிலாக மடபண கடன் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. அதற்கமைய, கடந்த 05 வருடகால போகங்களில் ஒவ்வொரு மாவட்டத்திலும் பெற்றுக்கொள்ளப்பட்ட பொதுவான விளைச்சலை அடிப்படையாகக் கொண்டு கடன் தொகை ஒதுக்கப்பட்டுள்ளது. உத்தேச கடன் திட்டத்தின் கீழ் 09 பில்லியன் ரூபாய்கள் கடன் வழங்குவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. சிறிய மற்றும் நடுத்தர நெல் ஆலை உரிமையாளர்களுக்கு உயர்ந்த பட்சம் 50 மில்லியன் ரூபாய்களும், நெற் களஞ்சிய உரிமையாளர்கள் மற்றும் மொத்த நெல் கொள்வனவாளர்களுக்கு உயர்ந்த பட்சம் 25 மில்லியன்களுமாக கடன் வழங்கப்படும். கடன் மீளச் செலுத்தும் காலப்பகுதி 180 நாட்களாகும்.

வருடாந்த வட்டி வீதம் 15% வீதமாவதுடன், அதில் 4% வீதம் திறைசேரியால் பங்களிப்புச் செய்யப்படும். அதற்கமைய, உத்தேச நெல் கொள்வனவு வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சராக கௌரவ ஜனாதிபதி அவர்கள் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**07. 2024 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) ஒழுங்குவிதிகளை பாராளுமன்ற அங்கீகாரத்திற்காக சமர்ப்பித்தல்**

வெளிநாட்டு செலாவணி சந்தையின் அடிப்படையில் ஏற்பட்டுள்ள அழுத்தத்தை தளர்த்துவதற்கான நடவடிக்கையாக கட்டுமான வாகனங்கள் மற்றும் நோயாளர் காவு வண்டி தவிர்ந்த மோட்டார் வாகனங்களின் இறக்குமதியை அரசு தற்காலிகமாக இடைநிறுத்தியுள்ளது. ஆனாலும், ஸ்ரீலங்கன் விமான சேவைக் கம்பனியின் பயன்பாட்டுக்காக வணிக வகுப்பு ராம்ப் கோச் 03 இனை இறக்குமதி செய்வதற்கும், ஐக்கிய நாடுகள் சபையின் சனத்தொகை நிதியத்தின் மூலம் அன்பளிப்புச் செய்யப்பட்ட நடமாடும் மகப்பேற்று அலகுகள் 03 உம், ஐக்கிய நாடுகள் சபையின் சிறுவர் நிதியத்தின் மூலம் வழங்கப்பட்டுள்ள 21 டபள் கெப் வண்டிகளைப் பெற்றுக் கொள்வதற்கும், தொழில் அனுமதிப்பத்திர முறையை நிறுவும் போது கொரிய நிதியத்தின் கருத்திட்டத்திற்காக வழங்கப்பட்ட மோட்டார் வண்டியைப் பெற்றுக் கொள்வதற்கும், மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கி நிதியனுசரணையின் பேரூந்து வண்டிகள் 02 இனைப் பெற்றுக் கொள்வதற்கும், முறையே துறைமுகங்கள், கப்பல்துறை மற்றும்விமான சேவைகள் அமைச்சு, சுகாதார அமைச்சு, தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சு மற்றும் கல்வி அமைச்சு மூலம் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ள கோரிக்கைக்கு அனுமதி வழங்குவதற்கு 2023.12.11 அன்று அமைச்சரவை தீர்மானித்துள்ளது. அதற்கமைய, குறித்த மோட்டார் வாகனங்களை இங்க்குமதி செய்வதற்கு இயலுமை கிட்டும் வகையில், 2366/19 ஆம் இலக்க 2024.01.11 திகதிய விசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் வெளியிடப்பட்டுள்ள, 1969 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் கீழ் ஆக்கப்பட்டுள்ள 2024 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) ஒழுங்குவிதிகளை பாராளுமன்ற அங்கீகாரத்திற்காக சமர்ப்பிப்பதற்காக நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சராக கௌரவ ஜனாதிபதி அவர்கள் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**08. 1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க வங்கி சட்டத்தை திருத்தம் செய்தல்**

வங்கிகளுக்கான அனுமதிப்பத்திரம் வழங்கல், வங்கி உரித்து, ஒருங்கிணைந்த கண்காணிப்பு, மூலதனம் மற்றும் பணத் திரவத்தன்மை சட்டகம், வழங்கக் கூடிய உயர்ந்தபட்ச கடன் வசதிகளின் அளவு மற்றும் அதனுடன் தொடர்புடைய தரப்பினர்களுடனான கொடுக்கல் வாங்கல், சிறந்த ஆளுகைத் தேவைகள், அரச வங்கிகளின் ஒழுங்குறுத்துகை மற்றும் கண்காணிப்பு உள்ளிட்ட துறைகளில் காணப்படுகின்ற ஒழுங்குறுத்துகை நியமங்களை பலப்படுத்துவதற்கு இயலுமாகும் வகையில் ஏற்பாடுகளை உள்வாங்கி 1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க வங்கி சட்டத்தை திருத்தம் செய்வதற்கான சட்டமூலமொன்றைத் தயாரிப்பதற்காக 2023.06.26 அன்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. அதற்கமைய, சட்ட வரைஞரால் தயாரிக்கப்பட்டுள்ள சட்டமூலத்திற்கு சட்டமா அதிபரின் ஒப்புதல் கிடைக்கப்பெற்றுள்ளது. குறித்த சட்டமூலத்தை அரச வர்த்தமானியில் வெளியிடுவதற்கும், பின்னர் பாராளுமன்ற அங்கீகாரத்திற்காக சமர்ப்பிப்பதற்காகவும் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சராக கௌரவ ஜனாதிபதி அவர்கள் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**09. வர்த்தமானி அறிவித்தலுக்கான பாராளுமன்ற அங்கீகாரத்திற்காக சமர்ப்பித்தல்**

இறக்குமதி பால்மாவுக்கான 2011 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க துறைமுகங்கள் மற்றும் விமான நிலைய அபிவிருத்தி வரிச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய 10% வீத வரிவிதிக்கப்பட்டு 2023.09.21 அன்று வெளியிடப்பட்டுள்ள வர்த்தமானி கட்டளைகள் மற்றும் 2024.01.01 அன்று தொடக்கம் நடைமுறைக்கு வரும் வகையில் பெறுமதி சேர் வரி 15% வீதம் தொடக்கம் 18% வீதம் வரைக்கும் அதிகரித்தமைக்குரிய 2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க பெறுமதி சேர் வரிச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய 2023.12.19 அன்று வெளியிடப்பட்டுள்ள ஒழுங்குவிதிகளைப் பாராளுமன்ற அங்கீகாரத்திற்காக சமர்ப்பிப்பதற்காக நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சராக கௌரவ ஜனாதிபதி அவர்கள் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**10. 2023 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க கொழும்பு துறைமுக நகர (அபிவிருத்திக் கட்டுப்பாட்டு) ஒழுங்குவிதிகளைத் திருத்தம் செய்தல்**

காணித் துண்டுகளின் உட்பிரிவிடுகை, ஒருசில காணித்துண்டுகளின் பயன்பாடுகளை மாற்றம் செய்தல் மற்றும் தொழிநுட்பமல்லாத சரிப்படுத்தல்கள் சில உள்ளிட்ட, 2021 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழுச் சட்டத்தின் ஏற்பாடுகளை வெளியிட்டுள்ள 2023 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க கொழும்பு துறைமுக நகர (அபிவிருத்திக் கட்டுப்பாட்டு) ஒழுங்குவிதிகளைத் திருத்தம் செய்து 2358/70 ஆம் இலக்க 2023.11.17 ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் கட்டளைகள் வெளியிடப்பட்டுள்ளன. குறித்த கட்டளைகளை பாராளுமன்ற அங்கீகாரத்திற்காக சமர்ப்பிப்பதற்கு பதில் முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**11. இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசு மற்றும் தாய்லாந்து அரசுக்கும் இடையில் இருதரப்பு விமான சேவைகள் ஒப்பந்தம்**

இலங்கை மற்றும் தாய்லாந்துக்கும் இடையில் இருதரப்பு விமான சேவைகள் ஒப்பந்தத்தில் கையொப்பமிடுவதற்காக 2018.06.19 அன்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. பின்னர், தாய்லாந்து தரப்பினரால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள திருத்தங்களை உள்ளடக்கி தயாரிக்கப்பட்டுள்ள விமான சேவைகள் ஒப்பந்தத்திற்கு சட்டமா அதிபரின் ஒப்புதல் மற்றும் வெளிவிவகார அமைச்சின் உடன்பாடும் கிடைக்கப் பெற்றுள்ளது. அதற்கமைய, இரு நாடுகளுக்கிடையில் உத்தேச இருதரப்பு விமான சேவைகள் ஒப்பந்தத்தில் கையொப்பமிடுவதற்காக துறைமுகங்கள், கப்பல்துறை மற்றும் விமான சேவைகள் அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**12. முதலீட்டு உட்கட்டமைப்பு வசதிகள் கூட்டுத்தாபனத்தை தாபித்தல்**

முதலீட்டாளர்களுக்கான ஒருங்கிணைந்த உட்கட்டமைப்பு வசதிகளை வழங்கும் நோக்கில் முதலீட்டு ஊக்குவிப்பு வலயங்களை உருவாக்கல் மற்றும் முகாமைத்துவத்திற்காக முதலீட்டு உட்கட்டமைப்பு வசதிகள் கூட்டுத்தாபனம் எனும் பெயரிலான நியதிச்சட்ட நிறுவனத்தைத் தாபிப்பதற்கும், வீதிகள், மின்சாரம், நீர் மற்றும் வீடமைப்பு போன்ற அத்தியாவசிய உட்கட்டமைப்பு வசதிகளை முதலீட்டு ஊக்குவிப்பு வலயங்களில் வழங்குவதற்கான பொறுப்பை குறித்த கூட்டுத்தாபனத்திற்கு ஒப்படைப்பதற்கும் கௌரவ ஜனாதிபதி அவர்கள் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

13. **அரச நிறுவனங்களுக்கிடையே மேலெழுகின்ற பிணக்குகளைத் தீர்ப்பதற்காக சட்ட ரீதியான ஏற்பாடுகளை அறிமுகம் செய்தல்**

அரச நிறுவனங்களுக்கிடையே மேலெழுகின்ற பிணக்குகளைத் துரிதமாகத் தீர்ப்பதற்கு இயலுமாகும் வகையில் பொருத்தமான ஏற்பாடுகளை அறிமுகம் செய்வதன் தேவை கண்டறியப்பட்டுள்ளது. அதற்கமைய, சட்டமா அதிபரிடம் வினவி அதற்கான சட்டமூலத்தை தயாரிக்குமாறு சட்டவரைஞருக்கு ஆலோசனை வழங்குவதற்காக கௌரவ ஜனாதிபதி அவர்கள் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்துள்ளது.

14. **அஸ்வெசும நலன்புரி நன்மைகள் கொடுப்பனவுத் திட்டம்**

தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள அஸ்வெசும நலன்புரி நன்மைகள் கொடுப்பனவுத் திட்டத்தை கீழ்க்காணும் திருத்தங்களை உள்ளடக்கி நடைமுறைப்படுத்துவதற்கு நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சராக கௌரவ ஜனாதிபதி அவர்கள் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

- அஸ்வெசும பயனாளியாக தகைமை பெற்றவர்களில் இடர்களுக்கு உள்ளாகியுள்ள சமூகப் பிரிவுக்கான நன்மைகளைப் பெற்றுக் கொள்வதற்கான செல்லுபடிக் காலத்தை 2024.04.01 தொடக்கம் 2024.12.31 வரைக்கும், நிலைமாறுநிலை (பொருளாதார நெருக்கடியால் தற்காலிகமாக வருமானம் இழக்கப்பட்டுள்ள) நன்மைகளைப் பெற்றுக் கொள்வதற்கான செல்லுபடிக் காலத்தை 2024.01.01 தொடக்கம் 2024.12.31 வரைக்கும் நீடித்தல்,
- தற்போதுள்ள இடர்களுக்குள்ளாகிய சமூகப் பிரிவு மற்றும் நிலைமாறு சமூகப் பிரிவு (பொருளாதார நெருக்கடியால் தற்காலிகமாக வருமானம் இழக்கப்பட்டுள்ள) போன்ற இரண்டு பிரிவுகளையும் ஒன்றிணைத்து எட்டு இலட்சம் குடும்பங்களுக்காக இடர்களுக்கு உள்ளாகியுள்ள பிரிவாக 2024.01.01 தொடக்கம் கருத்தில் கொண்டும், குறித்த குடும்பங்களுக்காக 5000/- கொடுப்பனவை 2024.12.31 வரைக்கும் செலுத்தல்,
- தகவல்களை உறுதிப்படுத்தும் செயன்முறையின் பின்னர் அஸ்வெசும குடும்பங்களின் பட்டியலில் காணப்படாத அடையாளங் காணப்படாத சிறுநீரக நோயாளர்களுக்கு 7,500/- ரூபாவும், மற்றும் இயலாமையுள்ள நபர்களுக்கு 7,500/- ரூபாவும், மற்றும் முதியோர்களுக்கு 3,000/- ரூபாவும் 2024 ஏப்ரல் மாதம் தொடக்கம் நடைமுறைக்கு வரும் வகையில் மாதாந்தக் கொடுப்பனவு செலுத்தல்,
- தற்போது கொடுப்பனவுகளைப் பெறுகின்றவர்களும், காத்திருப்புப் பட்டியலில் பதிவு செய்யப்பட்டவர்களில் அடையாளங் காணப்படாத சிறுநீரக நோயாளர்களுக்கு 7,500/- ரூபாவும், மற்றும் இயலாமையுள்ள நபர்களுக்கு 7,500/- ரூபாவும், மற்றும் முதியோர்களுக்கு 3,000/- ரூபாவும் 2024.01.01 தொடக்கம் நடைமுறைக்கு வரும் வகையில் அதிகரிக்கப்பட்டு இக்கொடுப்பனவுகளை அஸ்வெசும வேலைத்திட்டத்திற்கு வெளியே மாவட்டச் செயலாளர்கள்/பிரதேச செயலாளர்கள் மூலம் மேற்கொள்ளல்,
- இரண்டாவது சுற்றுக்காக விண்ணப்பங்களைக் கோரல் 2024 முதலாம் காலாண்டில் ஆரம்பித்து 2024 யூன் மாதத்தில் நிறைவு செய்யப்பட்டு யூலை மாதம் தொடக்கம் கொடுப்பனவுகளை வழங்குவதற்கும், மேலதிகமாக தகைமைகளைப் பெறுகின்ற குடும்பங்களை

உள்வாங்குவதற்கும் தகைமை பெறுகின்ற குடும்பங்களின் மொத்த எண்ணிக்கையை உயர்ந்தபட்சம் 2.4 மில்லியன்களாகத் திருத்தம் செய்தல்.

*****

**தமிழ், ஆங்கில மொழிபெயர்ப்புக்களுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள மொழியே மூலமாக அமையும்.**